உ

சிவமயம்



பண்ணாகம்

அமரர் திரு. சி. அப்பாப்பிள்ளை அவர்களின்

அன்புப் பத்தினி

## திருமதி வள்ளியம்மை

அவர்களின்

# நினைவு மலர்.

2 — 7 — 1975.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி வள்ளியம்மை அப்பாப்பிள்ளை அவர்கள் சிவபதமெய்தியமையைக் குறித்த

# நினைவு மலர்.

### திதி வெண்பா

இராட்சத வைகாசி பத்தொன் பதாம்நாள்
விராவபர அட்டமியே மேலோர் — பராவுபுகழ்க்
கற்பரசி வள்ளியம்மை கைவிட் டுலகபந்தம்
சிற்பரனைச் சேர்ந்த தினம்.

### ஆசிரியப்பா

பூவுறை செல்வி பொருந்தி யருள்செய்
நாவலர் ஏத்தும் நாடாம் ஈழத்துத்
துலங்கு யாழ்நகர் தொல்புகழ் மிக்க
நலம்பெறு நல்லூர் சோழியர் புரத்துறை
கருணை யாளன் கதிர்காமர் தமக்குப்
பெருமக ளுகத் தோன்றிய செம்மல்
ஆறுமுகம் அந்நாள் சான்றோர் போற்ற
நீறணி ஈசன் திருவடி வாழ்த்தும்
ராம நாதர் தந்த பொன்னு
என்னும் நாமம் பொருந்தப் பெற்ற
தையலை மணந்தே தருக்குடன் என்றும்
வையகம் வாழ்த்த வாழ்ந்திடு நாளில்
ஆசை யம்மா இராம லிங்கம்
நேசம் நிறைந்திடு வள்ளி யம்மை
செல்லம் மாவுடன் அன்னப் பிள்ளை
ஆய ஐவரை அன்புடன் பெற்றே
தூயநல் லறங்கள் பற்பல புரிந்தே
இனிதாய் வாழ்ந்தனர் யாவரும் போற்ற
விதியின் வலியால் விளங்கா றுமுகன்
பதியாம் சிவன்தாள் பற்றினன்; அதனுல்
மீகான் இன்றித் தவித்திடும் கலம்போல்
மீளாத் துயரால் துடித்திடக் குடும்பம்
மாண்புறு சோதரன் இராம லிங்கன்
தந்தையாய்த் தாயாய் தண்ணளி செய்தே
பாது காத்தனன் உடன்பிறப் பாளரை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு அண்ணன் அருமைத் தங்கை
பண்புச் செல்வி பன்னலம் வாய்ந்த
வள்ளி யம்மைக் குற்ற தலைவனாய்
பண்ணு கப்பதி வாழ்ந்திடு செம்மல்
கண்ணும் விசுவர் தம்மரும் மைந்தன்
சின்னட்டி யாரும் தையலர் செல்வி
தங்க முத்துவும் தந்திடுந் தோன்றல்
மாற்றார் யாரும் மதித்திடு செம்மல்
ஆற்றார்க் குதவி அவர்துயர் களையும்
இனிய வீரன் இரும்கலை யாளன்
முனிவிலான் என்றும் முத்தமிழ் போற்றும்
வலிமிகப் படைத்தோன் வள்ளல் தயாளன்
புலிநிகர் தமிழன் பொருந்து புகழ்சேர்
மலாயா தேய ரயில்வேப் பகுதி
நிலைய அதிபராய் நீணிலம் போற்றப்
பணிபல புரிந்து நிதிக்குவை சேர்த்த
அடல்மிகும் அப்பாப் பிள்ளை யவர்க்கு
வள்ளி யம்மையை மனையா ளாக்கினர்
வள்ளுவன் வாசுகி போலறம் பேணித்
தெள்ளு தமிழும் சுவையும் போல
இணைந்தொன் ருகி இருவரும் இனிய
உத்தம வாழ்வு வாழ்ந்திடு நாளில் ;
கங்கை கொண்டோன் கடாரம் வென்ரேன்
சங்கம் மூன்றிலும் செந்தமிழ் வளர்த்தோன்
பரணி பாடித் தரணி யாண்டோன்
திசை எட்டும் அதிரத் தமிழ்கொடி நாட்டி
இசையுடன் வாழ்ந்தோன் ஏற்றம் பெற்ரேன்
அவனே தமிழன் அவனே தமிழன்
அகன்ற அரசு மீண்டும் மலரப்
பணியிரு ளகற்றும் பரிதி என்னக்
கனிவுடன் உழைக்கும் கண்ணிய வாளன்
சொல்லின் செல்வன் அமிர்த லிங்கனை
நல்லூழ் வயத்தால் மூத்தோ ஞக
ஈன்றனள் அன்னை எம்தமிழ் வாழ
அதன்பின்
சட்டத் துறையில் தனக்கெனத் தனியிடம்
பட்டொளி வீசச் செய்தோன் யார்க்கும்
அஞ்சா நெஞ்சன் அரிமா அன்ன
செஞ்சொல் லாளன் சொக்க லிங்கனும்
வணிகத் துறையில் வளம்பல கண்டோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கும் மனமும் ஒன்ருய்த் துலங்க
வாழ்வோன் வாசு தேவ லிங்கனும்
உள்ளம் பொய்யா தொழுகும் உத்தமன்
வளம்தரு கல்வியை வாரி வழங்குவோன்
மலர்ந்த முகத்தாய் மாற்ருர் மருள
நலந்திகழ் வார்த்தை நயந்தே மகிழ்வோன்
திகம்பர லிங்கனும் என்ற மாமணிகளைப்
பெற்றனர் அவர்தமைப் பேணிக் காத்தே
குற்றமி லாராய்க் குணக்கட லென்ன
ஒழுக்கம் உயிரினும் ஓம்புவர் என்ற
பழுத்த ஞானி வள்ளுவன் உரையைப்
பண்புடன் மக்கட் குபதே சித்தே
எண்ணருங் கலைகளில் மைந்தர் ஓங்கிடத்
திண்ணராய் வளர்த்தனள் தீந்தமிழ் சிறக்க;
அலகில் புகழான் அமிர்த லிங்கனை
உலகம் போற்றும் அரசியற் றலைவனுய்
ஆக்கியே மகிழ்ந்து அரும்பெறற் செல்வி
மங்கையர் திலகமாம் மங்கையர்க் கரசியைச்
செங்கரம் பற்றச் செய்ததன் பேருய்க்
கடகரி யன்ன காண்டீப னேடு
திடமனம் கொண்ட பகீரதன் தன்னையும்;
கடமை யாளன் சொக்க லிங்கனைச்
சட்டத் துறையில் தருக்குடன் திகழ
ஆக்கி அவற்கோர் அரிய துணையாய்
மடற்கம லத்துறை மங்கையை யொத்த
ஞானேஸ் வரியை நாடியே பெற்று
எழிலார் செல்வச் செம்மல்க ளாக
இந்து வதனி ரதிவத னியையும்
புண்ணியன் வாசு தேவ லிங்கன்
திண்ணமாய்ச் செல்வம் சேர்த்திட வணிகத்
துறையினுள் புகுத்தி அவர்க்குத் துணையாய்த்
திருநிகர் கமலா தேவியை ஈந்து
பெருகிடு காதல் உளத்தே வளர்க்கும்
செந்தில் ராசன் அன்பர சியோடு
முத்தழ கன்எழில் அரசியாம் இவருடன்
திறமிகு தீரன் திகம்பர லிங்கனை
அருங்கலை யூட்டி ஆசா ஞக்கி
அணிதிகழ் பொற்கொடி ஞானம் பிகைக்கு
ஒப்பரும் தலைவனுய் உவந்துநீ ஆக்கியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமா மதியெனும் அருண்மதி யுடனே
திருமால் அருளால் அன்பழ கனையும்
முறையே நான்கு மைந்தரும் அம்மா
நிறைவாய் அளித்தனர் பேரர் தம்மை
பேணிக் காத்தனர் பெரும்புகழ் பெற்றனை
மழலை இன்பம் வாரிப் பருகினை
உன்னரும் பேரர் உயர்வு பெற்றிட
பொன்னும் மணியும் வாரி வழங்கினை
நின்னரும் தலைவன் இறைபதம் எய்தவும்
மன்னு புகழறம் மருவியே தழைத்திட
நேரிய பண்பெனும் நிறையகல் விளக்கில்
அன்பெனும் ஆர்வநெய் நன்குநீ பெய்தே
பாசமாம் திரியதில் பற்றிட ஒளியே
ஆக்கினை இல்லம் புதுப்பொலி வுடனே
விசவத் தனையுறை வேலவன் அருளால்
நாளும் பொழுதும் நற்பணி யாற்றி
சுற்றம் பேணித் தொன்நெறி காத்து
உற்றூர்ப் போற்றி உறுபசி தீர்த்து
மக்கள் மருகியர் மனமகிழ்ந் தேத்த
பேரப் பிள்ளைகள் பேணி யார்த்திட
புண்ணியப் பயனால் பொருந்துநல் வாழ்வில்
எண்ணிய யாவும் இனிதே பெற்றுப்
பூரண வாழ்வு பொலிவுடன் விளங்க
வாழ்ந்தனை அன்னாய் மாநில மீதே
நின்போற் பேறு பெற்றூர் யாரோ
தாரணி தன்னை வெறுத்துநீ அந்தோ
யாவரும் தேம்பி அழுதிட மேலாம்
மலர்முகம் தன்னில் மகிழ்வு பூக்கத்
தவக்கொழுந் தாகத் தண்ணுமை பாகன்
சிவக்கொழுந் தடியினைச் சேர்ந்தனை வாழி!

---

### புதல்வன் அமிர்தலிங்கம் இரங்கல்

முன்னாளென் தவத்தாலே அம்மா உன்றன்
முதல்மகனாய் நான்பிறக்கத் ' துரையே ' என்று
என்மீது சொரிந்தன்புப் பாசம் காட்டி
ஏற்றமுயர் கலையெல்லாம் ஊட்டி வைத்தாய்
அன்னாய்நீ பிரிந்தனையோ அந்தோ அம்மா
அரும்மனைவி மக்கள்ஊர் கதறச் சென்றாய்
உன்மீது ஆணையிட்டுக் கூறு கின்றேன்
உடலாவி பொருளெல்லாம் தமிழுக் காகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதல்வன் சொக்கலிங்கம் இரங்கல்

எனைப்பெற்று வளர்த்தெடுத்த தாயே வாழ்வில்
எல்லாம்யான் அடைந்திடவே செய்தாய் அம்மா
தினைப்போதும் இளமையிலே பிரியா தன்பாய்
தேவையெது எனக்கண்டே உவந்தளிப்பாய்
உனைப்போல வாழ்வளித்த வேறு தெய்வம்
உலகினிலே எங்குண்டு 'ராசா' என்பாய்
நினைப்பென்ற ஒன்றுண்டே மறக்க லாமோ
நின்பிரிவை எவ்வாறு ஆற்று வேனே.

### புதல்வன் வாசுதேவலிங்கம் இரங்கல்

அன்புறு தாயே அம்மா ஆர்வமாய் வளர்த்தெடுத்தாய்
முன்புறு கருணை யாலே முத்தென ஒளிர வைத்தாய்
இன்புறு வேளை எல்லாம் இதமதாய்த் தேவர் என்பாய்
என்புரு கின்ற தேயோ ஈசன் தாள் சேர்ந்தாய் நன்றே.

### புதல்வன் திகம்பரலிங்கம் இரங்கல்

ஆயநற் கலைக ளெல்லாம் ஆர்வமாய்க் கற்க வைத்தே
தூயநல் லாசா ளைக்கித் துலங்கிடு வாழ்வு தந்தாய்
நேயமாய் 'அப்பு' என்பாய் நீணிலம் விட்டு ஏனோ
மாயமாய் மறைந்தாய் அம்மா மாதவன் பாதம் நாடி.

### மருகி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் இரங்கல்

வீட்டுக்கு நல்ல 'வனை' வைப்பாய் என்ற
விளங்குதமிழ்ச் சான்றோர்கள் மொழியைப் பேணி
நாட்டுக்குப் பணியாற்றும் வீரன் வாழ
நாடியெனை மருகியாய் ஆக்கிக் கொண்ட
தீட்டரிய திறன் எங்கே தெய்வம் தந்த
திருமருவு பொலிவெங்கே எங்கே மாமி
ஏட்டுக்கோர் இலக்கியமாய் நிற்கும் பண்பை
எடுத்தோத யாரம்மா எங்குற் றாயோ ?

### மருகி ஞானேஸ்வரி சொக்கலிங்கம் இரங்கல்

குணம்நாடிக் கூறிடுவாய் குற்றம் நீத்துக்
குலவுகின்ற சிரிப்பாலே எம்மை ஈர்ப்பாய்
மணங்கோடி அளிக்கின்ற மலரே என்ன
மாமியர்க்கோர் தனியரசி ஆகி நின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணசிகிச்சை நீபெற்று வந்த போது
நாம் தொண்டு செய்திடவே இசைந்து பெற்ருய்
கணநேரம் மறப்போமோ மாமி யுன்னைக்
கற்பகமே நாம்களிக்க வருவ தென்ருே?

மருகி கமலாதேவி வாசுதேவலிங்கம் இரங்கல்

இல்லத்தே நான்இருக்க இனிமையாக
ஏற்றபல உதவிகளைச் செய்த ளிப்பாய்
மெல்லத்தான் பிழைகண்டால் திருத்தி நிற்பாய்
மேலான புண்ணியத்தின் பயன தாக
சொல்லத்தான் போமோஉன் ஆற்றல் எங்கே
சுகதுக்கம் யாவிலும்நீ பங்குகொண்டாய்
கல்லுத்தான் ஆனதுவோ உந்தன் நெஞ்சம்
காற்ருேடு கலந்தேநீ சென்ருய் மாமி.

மருகி ஞானும்பிகை திகம்பரலிங்கம் இரங்கல்

இறக்கும்வரை உம்மோடே இருப்பே னென்று
இனியதொரு உறுதிமொழி தந்து விட்டே
துறக்கமதை நாடித்தான் சென்ற தேனே
தொல்லுலகில் எவரம்மா துணையெ மக்கு
இறக்கையினை இழந்தஒரு பறவை யானேம்
இனியார்தான் ஈண்டுள்ளார் மாமி உன்போல்
மறக்கத்தான் போமோசொல் மாயக் கூற்ரு
மாமியைநீ கொண்டோடிப் போன தேனே.

பேரர்

காண்டீபன் — பகீரதன்; இந்துவதனி — ரதிவதனி;
செந்தில்ராசன் — அன்பரசி — முத்தழகன் — எழில்அரசி;
அருள்மதி — அன்பழகன்

இரங்கல்,

வெண்பா:

இப்பாரில் நாம்பிறக்க ஈசன் திருவருளால்
முப்பால்நூல் கூறும் மொழிக்கொப்ப — இப்பாரில்
நல்லறங்க ளாற்றி நலம்பெறுக என்றுரைத்த
எல்லையிலா அப்பாச்சி எங்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தநாள் தொட்டுப் பெருமிதமாய் அன்பாகப்
பறந்தோடி எம்மில்லம் வந்தாய் — இறந்தனையோ
அப்பாச்சி ஆரெமக்கு ஆனபொருள் தந்திடவே
செப்பாய்நீ எம்முள்ளம் சேர்ந்து?

ஆய கலைத்தேர்வில் ஆனசித்தி பெற்றிடவே
நேய முடன்பரிசில் நீயளிப்பாய் — தூய
நிறைமதியே விட்டெம்மை நீயோடிச் செல்ல
குறையென்ன செய்தோம்நாம் கூறு.

மருவினிய பேரரென மாறாத காதலுடன்
வருவாய்நீ பட்சணத்தோ டெம்பால் — கருதரிய
பொன்னுலகு நாடிப் போயினையோ அப்பாச்சி
மன்னுபுகழ் மாதாய் மகிழ்ந்து.

## சகோதரர் இரங்கல்.

திண்பொருள் எய்த லாகும் தெவ்வரை செகுக்கலாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாரையும் நண்ண லாகும்
ஒண்பொருள் வாழ்வில் நல்ல உடன்பிறப் பெய்த லாமோ
பண்புடைத் திருவே யுன்றன் பாசத்தாற் கலங்கு கின்றோம்.

## உற்றார் ஊரவர் இரங்கல்.

எந்தப் பொழுதிற் கண்டாலும் இனிய முகமும் புன்னகையும்
முந்தக் காட்டி யின்சொற்கள் மொழிந்து தழுவி ஆதரவாய்ச்
சிந்தை மகிழச் சீராட்டும் செல்வ வள்ளி யம்மையைநாம்
அந்தோ இழந்தோம் மணியிழந்த அரவு போல ஆனோமே.

## தேற்றம்.

எண்ணுதற்கும் சொல்லுதற்கும் எட்டா நுட்ப
இயல்களின் ஞானமின்று காட்டு மேனும்
மண்ணுலகில் இறந்தோரை மீட்ட லில்லை
மாயவாழ் விதுமாறிப் போதல் திண்ணம்
உண்மையிதை நாமுணர்ந்து வள்ளி யம்மை
உயிர்நீத்தா ரெனக்கவலை யுறுதல் விட்டு
எண்ணமுறை செயல்களிலே புனித ராகி
இலட்சியவாழ் வினைமேற்கொண் டிலங்கு வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வீர உணர்வூட்டிய தாய்

சா. ஜே. வே. செல்வநாயகம்

காலஞ்சென்ற திருமதி அப்பாப்பிள்ளை வள்ளியம்மை அவர்களின் நினைவாக ஒரு மலர் வெளியிடப்பட விருப்பதாக அறிகிறேன்.

திருமதி வள்ளியம்மை அவர்கள் அவருடைய பிள்ளைகளாலும் இனத்தவர்களாலும் மட்டுமல்ல ஈழத்தமிழ் மக்களனைவராலும் நினைவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டியவராவர். அவர், தமிழ் மக்களின் விடுதலைப் போரில் முன்னணியில் நின்றுழைக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திருவாளர் அமிர்தலிங்கம் அவர்களைப் பெற்றெடுத்த வீர உணர்ச்சியை ஊட்டி வளர்த்தவர்.

ஒருவரின் பெருமை அவருடைய பிள்ளைகள் மூலம் தெரியும். திருமதி வள்ளியம்மை அவர்களின் பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவருடைய பெருமைக்குச் சாட்சிகளாக இருந்து வருகிறார்கள்

அவருடைய பெயர் என்றும் நிலைத்திருக்குமாக.

சா. ஜே. வே. செல்வநாயகம்

---

## வள்ளியம்மை வாழ்கிறாள்.

( கவிஞர் — காசி ஆனந்தன் )

வான்றிகழ் புவியில் இந்த வண்ணப்பொன் உலகில் அன்னை
ஈன்றிங்கு பிறப்போ ரெல்லாம் இறத்தல்மெய் எனினும் மண்ணில்
ஊன்றசை வாழ்வுக் கப்பால் உயர்ந்திங்கு மேன்மை கொள்ளும்
சான்றோர்க்கும் அவரை ஈன்ற தாய்மார்க்கும் சாவே இல்லை,

தெள்ளரும் தமிழைக் காக்கும் தீரனை ஈன்ற அம்மை
வெள்ளத்தைப் புயலை வீர வேங்கையைப் படைத்த அம்மை
பிள்ளையில் அமிர்த லிங்கப் பிள்ளையை பெற்ற அம்மை
வள்ளியம் மைக்குச் சாவு வாராது வாரா தையா!

ஆண்டசெந் தமிழி னத்தின் அடிமை வாழ்வொழிக்கும் வீரன்
காண்டீ பனுக்குத் தந்தை களத்தினில் மாற்றார் யாரும்
தாண்ட ஒண்ணாத வீரத் தளபதி ஒருவ னுக்கு
மாண்டவள் அன்னை என்றால் மாண்டாளா இல்லை என்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிகர் இல்லாத் தேவி தாய்மையாம் அமுத ஊற்றே
இன்னுயிர் மூச்சே எங்கள் எழில்மணி வைரக் கல்லே
அன்னாய் இப்புவியை நீத்தாய் ஆனாலும் அழியாத் தாயாய்
என்னாளும் தமிழர் நெஞ்சில் இருந்தனை வாழி அம்மா;

---

## பார்புகழ வாழ்ந்த நறும் பத்தினி

### வெண்பா

*பண்ணாகத் தில்வாழ்ந்து, பார்வதியின் தாள்சேர*
*மண்ணினரை விட்டகன்ற வள்ளியம்மைப் — பெண்ணணங்கே!*
*பார்புகழ வாழ்ந்தநறும் பத்தினியே! விண்ணகத்தே*
*சீர்பெறவே வாழ்வாய் செழித்து.*

"பண்ணைமூலை"
டாக்டர் ந, சுப்பிரமணியம்
Dr. N. Subramaniam
M. B B. S. F. R. C. S. ED, F R. C, S. Eng.
NEUROSURGEON.

---

## விண்ணுலகுக்கு கடிதம்

சிவபதமடைந்த சின்னட்டியர் அப்பாப்பிள்ளையின் வாழ்க்கைத் துணைவி,
அன்னை வள்ளியம்மை அவர்களே,

தாங்கள் 4-5-75 ~~செவ்வாய்க்~~கிழமை மண்ணுலகை விட்டு விண்ணுலகை அடைந்தீர்கள். உங்கள் பிரிவாற்றாது மக்கள் மனம் கலங்கிக் கதறினர், மருமக்கள் அலறி அழுதனர். பேரப்பிள்ளைகள் பெருஞ்சத்தமிட்டு அழுதனர் உற்றார், உறவினர் உருகி அழுதனர். ஊரவரும், மற்றவரும் ஆயிரமாயிரமாய் அணியணியாக, வேறெங்கும் காணாதவகையில், வந்து துயரத்திற் கலந்தனர்.

பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணம் எனவும் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ" எனவும் உணர்ந்து பின் தேறினர். ஆனால் நீங்கள் இறக்கவில்லை. புகுந்த உடம்பை விட்டு, புகழுடம்பு நிறுவினீர்கள். உங்கள் பிரதி விம்பங்கள் ஒலிமயமான நான்கு இலிங்கங்கள் இங்கு இருக்கின்றன; அமிர்தலிங்கம், சொக்கலிங்கம் வாசுதேவலிங்கம், திகம்பரலிங்கம். அமிர்தலிங்கமோ தமிழன்னையை அரியாசனம் ஏற்றவும், ஈழத் தமிழ் நாடு சுதந்திரமாய் வாழ வழி வகுக்கவும் ஏற்ற தொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்குத் தன் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணம் செய்து திடசங்கற்பம் பூண்டிருக்கின்றார். இவர் தமிழன்னையின் புதல்வன் என எல்லோராலும் கருதப்படுபவர். தமிழன்னைக்கு ரூபமில்லை. அன்று உங்கள் ரூபத்தில் எல்லோரும் தமிழன்னையைக் கண்டார்கள். சொக்கலிங்கமோ அரசாங்க சேவையில் அமர்ந்திருந்தும் அது அடிமை வாழ்க்கை எனக் கருதி உதறிவிட்டுச் சட்டத் தரணியெனத் தாரணியில் விளங்குகின்றார். வாசுதேவலிங்கமோ தனது வாழ்க்கையை நடத்தத் தாமாகவே தமக்கொரு தொழிலை மேற்கொண்டார். திகம்பரலிங்கம் இகமொழி குருவாய் அமர்ந்து நற்பணியாற்றி வருகின்றார்.

" தவத்தளவேயாகுமாம் தாம் பெற்ற செல்வம் " என்பார்கள். இந்தச் செல்வங்களைப் பெற நீங்கள் செய்த தபசு தான் என்னே ! இல்லறத்தை நல்லறமாய்க் கொண்டு உரிய நெறிமுறையில் வாழ்க்கையை நடத்தினீர்கள் போலும். நீங்கள் பெண்ணுலகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றீர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள். வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டு இறைவனடி சேர்ந்தீர்கள். இறைவன் கருணை உருவானவர். கருணையே பொழிபவர். அக் கருணை வெள்ளத்தை இங்கே திருப்பி விடுங்கள். வீடு சிறக்கும், நாடு சிறக்கும் தமிழன்னை மிளிர்வாள் குறைவிலாது உயிர்கள் வாழும்.

வைத்தியகலாநிதி க. கெங்காதரம்பிள்ளை
சித்தங்கேணி.

---

## மருமக்கள் மனதில் என்றும் மகிழ்வுடன் வாழும் மாமிக்கு

அன்பு மருமகள் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

அறிவிற்கும் வீரத்துக்கும் அழியாத ஒற்றுமைக்கும்
ஆரமாய் விளங்கும் கண்ணும் பண்ணுகத் தமிழன் மண்ணில்
தீரமாய் மலாய் நாட்டின்கண் திகழ் வீரன் அப்பாப்பிள்ளை
தாரமாய் அமைந்த எங்கள் தாய்மையே வள்ளியம்மை !

பிள்ளைகள் நால்வருக்கும் மனைப் பேருய் வந்த எம்மை
அள்ளியே எடுத்து அன்பைக் கொள்ளையாய் சொரிந்து நின்றீர்
தொல்லைகள் காட்டாக் கோல எழில் முகம் காட்டி உங்கள்
சொல்லுயர் மைந்தர் காதல் சிந்தை நாம் நிறையச் செய்தீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் சொரிகின்ற உங்கள் திருமுகம் மலர்ச்சி கொள்ள
மாண்புயர் மனையறம் நல் முத்தென விளைந்த செல்வம்
சான்றோர்கள் போற்றும் பேரப் பிள்ளைகள் நிறைந்து சூழ
மான் விழி கண்ணீர் பொங்க மறந்தெமை ஏகினீரே !

நேசமே கொண்ட நெஞ்சம் நெகிழ்வுடன் வாட்டம் தீர்த்துப்
போசனம் படைக்கும் கைகள் புன்னகை தவழும் செவ்வாய்
' கணவனுர் தந்த கஞ்சி குடிக்கிறேன் ' என்று வந்து
கற்புடன் வாழ்ந்த வாழ்வு கண்டோர்கள் வியக்கும் வாழ்வு !

பெற்ருேரை இழந்த துன்பம் ' பிள்ளை ' என்றழைக்க மாறும்
உற்ருர் தம் துன்பமெல்லாம் உடன் உடன் தீர்ப்பீர் கண்டேன்
பற்றுத்தான் கொண்ட உங்கள் தலைமகன் நெஞ்சில் சாய்ந்து
வெற்றிவேல் விசவத்தனை வேலன் தாள் சேர்ந்தீர் மாமி !

---

## மாமியைப் பற்றிய நீங்காத நினைவு அலைகள்

எங்கள் அருமை மாமி இவ்வுலகை நீத்துப் போனபின் என் உள்ளத்திற் தோன்றி எழும் துன்ப அலைகள் சிலவற்றை எழுத்திற் பொறித்தாவது வேதனை தீர்க்கலாம் என்று எழுதத் துணிந்தேன்.

தாங்கள் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களை மணம் முடித்து, மருமக்களாய் வந்த நால்வரையும், பெற்றெடுத்த மகளிரென அன்பு பாராட்டி, வாயாரப் போற்றி எங்களுக்குப் பெருமை தேடினீர்கள். எங்களை அன்பாகப், பண்பாக, ஆதரவாக அழைத்த நல்வார்த்தை, அன்பு வார்த்தை, இனிமை வார்த்தை இன்றும் எங்கள் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. நெற்றியில் விபூதி தரித்துச் சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்ற மாமி இன்று எம் அருகில் இல்லை. பொறுமையும் சாந்தமும் நிறைந்த குழந்தையுள்ளம், அன்பும் மென்மையும் கலந்த இன்சொல், அமைதியான வாழ்க்கை, தன்னலமற்ற சேவைகள் – எல்லாம் எங்கள் மனக்கண்ணில் தோற்றமளிக்கின்றன.

இனிய உளவாக இன்னுதவற்றைக் கூறுதல் இழுக்கு என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கணமாய் வாழ்ந்து வழிகாட்டிய எங்கள் உத்தமியே ! அருமை மாமியே ! இன்று, உங்கள் அன்பு வார்த்தையைக் கேட்க முடியாது. மலர்ந்த வதனத்தைக் காண முடியாதவராய்க் கவலையில் மூழ்கித் திகைக்கின்ருேம். ஆபத்து வரும்பொழுது, அன்புக் கரம் தாங்கி ஆறுதல் மொழி சொல்லித் தேற்றும் மாமி இன்று எங்கே ? என்று ஏங்குகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினால் பல நாள் வாடாது, பாயினில் பல நாள் படுக்காது, உங்கள் பொன்னான மேனி வருந்தாது, இறைவன் உங்களைத் தன்னிடம் அழைத்தனரோ? அமரத்துவம் அடைந்த எங்கள் மாமியின் புனித ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்பு மருமகள்
திருமதி ஞா; சொக்கலிங்கம்

உ

## வள்ளியம்மையார் தெய்வமானார்

பண்ணாகப் பெரும்பதி பல பெரியார்கள் தோன்றிய பெருமை உடையது, அவர்களுள் தக்கோன் என்று போற்றப்பட்டவர் அமரர் அப்பாப்பிள்ளை அவர்கள். அன்னாருக்கு வாய்த்த அருமைப் பத்தினியார் வள்ளியம்மை அண்மையில் இறைநிலை எய்திவிட்டார். அவர் தன் புகழையும், கணவன் புகழையும், குடும்பப் புகழையும் ஓங்கச் செய்தவர்.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார் முன்
ஏறுபோற் பீடுநடை.

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக — அப்பாப்பிள்ளை அவர்களின் பெருமைக்குக் காரணராக விளங்கியவர் இவ்வம்மையார். அயலவர் — ஊரவர் — தமிழ்ச் சமுதாயத்தினர் பலராலும் நேசிக்கப்பட்டவர்; இளகிய மனமும் இன்சொல்லும் இயல்பாகவே அமைந்த இயல்பினர்; தங்க விக்கிரகம் போன்ற தோற்றம்; பத்தரை மாற்றுப் பசும்பொன் என ஒளிரும் உள்ளம்; பிறரது இட்டல் இடைஞ்சல்களைத் திறந்த மனத்துடன் கரிசனையோடு விசாரித்து அன்புப் பெருக்கோடு ஆறுதல் கூறும் பண்பு இவையே அன்னாரது அணிகலன்கள். அவரைப்பற்றிய எனது கருத்தைச் சுருக்கமாக எழுதித் தரும்படி பணித்தவர். அவரது கனிட்ட குமாரர் ஆசிரியர் திகம்பரலிங்கம் அவர்கள். இவ்வாய்ப்பினைத் தந்த அவருக்கு என் நன்றி. வாழ்வாங்கு வாழ்ந்து வையகம் மதிக்க மிளிர்ந்த வள்ளியம்மையார் இன்று தெய்வமானார். அவர் பண்புகள் மாதர் குலத்திடை என்றும் நின்று மிளிர்வனவாகுக.

பண்டிதர் அ. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருஞ்சிறப்புப் பெற்றார்

பெற்றான் பெறின் பெறுபவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழும் உலகு.

மனைவியர் தம்மைக்கொண்ட கணவனை அன்பினால் பேணி, தம்முடையவராகப் பெற்றுக்கொண்டால் இம்மையில் பெருஞ் சிறப்பினையும் மறுமையில் தேவ உலக இன்பத்தையும் பெறுவர் என்பது ஸ்ரீ திருவள்ளுவரின் பொருளாகும். இதற்கு இலக்கியமாக வாழ்ந்தார் திருவாட்டி வள்ளியம்மை அவர்கள்.

அவருடைய கணவர் திருவாளர் அப்பாப்பிள்ளை அவர்கள் பேரறிவும் பேராண்மையும் படைத்தவர். நேர்மையாளர். தாம் நினைத்ததைச் சாதிக்கும் இயல்பு வாய்ந்தவர். அன்னாரைத் தமது அன்பினாலும் பொறுமையாலும் வசப்படுத்தி இல்லத்தரசியாக வாழ்ந்து வழிகாட்டினார். சான்றோராகிய நன்மக்களைப்பெற்று பெரிதும் உவப்படைந்தார், சீரும் சிறப்பும் செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்தும் பெருமிதமின்றி எல்லாரையும் அணைத்து பெருமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து இறைவனின் திருவடிநீழலில் பேரின்ப வாழ்வு பெற்றுவிட்டார்,

அவருடைய நான்கு மக்களும் நான்கு இரத்தினங்கள். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சிரேஷ்ட ரத்தினமாவர். மக்கள் நால்வரிலும் தந்தையாரின் அறிவும் ஆண்மையும், தாயாரின் அன்பும் பொறுமையும் கலந்து மிளிர்வதை நன்கு காணலாம். மக்களின் பெருமைமிக்க வாழ்வினை தந்தையார் காணக் கொடுத்து வைக்கவில்லை. தாயார் கண்டு அனுபவித்துவிட்டார், நான்கு மருமக்களையும் தாம் பெற்ற பெண்மக்களாகவே கருதி அன்புகாட்டி, சிறந்த மாமியாருக்கு உதாரணமாக வாழ்ந்தார். பேரப் பிள்ளைகளிடம் பேரன்பு கொண்டிருந்தார்.

திருவாட்டி வள்ளியம்மை அவர்களை அண்மைக்காலத்தில் நான் காணும்போது எல்லாம், எனக்கு என்னைப்பெற்ற தாயாரின் நினைவுவரும். அப்போதெல்லாம் தாயேயாகி வளர்வதனைப் போற்றி என்று மனதிலே வழுத்துவேன். அவர் என்னைக் காணும் போதெல்லாம் "உபாத்தியார் இப்ப உங்களின் சுகம் எப்படி" என்று அன்புடன் விசாரிக்கும் போது அவ்வார்த்தைகள் என்னுள்ளத்தில் தேனாக இனிப்பன. அன்பு இனிக்குமல்லவா? அவர் அன்பின் வடிவம்.

எல்லோரும் மதிக்கும் வண்ணம் பெருவாழ்வு வாழ்ந்த வள்ளியம்மை அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல முருகப் பெருமான் திருவடிகளை வழுத்துவோமாக.

இ. அப்பாத்துரை,
இளைப்பாறிய ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலதெய்வம் ஆறுமுய் வாழி.

*( புலவர் கா. வேல்முருகன் )*

இல்லமதை நாடிவரு விருந்தி னர்கள்
இதமாக மகிழ்ந்திடவே யிருக்க வைத்து
மெல்லமதாய் உரையாற்றி யுண்வ ளித்து
மேலெழுந்த அன்பதனை முகத்திற் காட்டி
நல்லபல அறங்களெலாம் செய்த பாங்கை
நாம்மறவோம் நாநிலத்தின் நீள்வி ளக்கே
எல்லையிலாப் பெரும் பேறே பெற்றாய் இங்கு
எழுதரிய குணக்குன்றே என்றும் வாழி!

அமிழ்தான மொழியாவாள் அனைத் துலக
அருமொழிகள் பலவுக்கும் தலைவி யாவள்
தமிழ்மாது வாழத்தொண் டாற்றி னோர்கள்
சாவதில்லை இதயத்தே நீடு வாழ்வர்
புகழ்மாதே நீயீன்று வளர்த்த செல்வர்
பூமியிலே அறங்காப்பர் புனித ராகத்
திகழ்கின்ற புறங்கண்ட தாயே வீரர்
திருவேநற் குலதெய்வம் ஆறுய் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுகிறேம்.

எம் அருமை அன்னையாரின் நினைவாக வெளியிடப்படும் இச்சிறு மலருக்கு கட்டுரைகள் வழங்கிய பெரியோர்களுக்கும், இரங்கற் பாக்கள் யாத்து இந்நூலைத் தொகுத்துதவிய நண்பர் அவர்கட்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் மரணச் சடங்கில் கலந்து கொண்டும் அன்புகாட்டிய நண்பர்கள், உறவினர் ஆகியோருக்கும், எம் கிராமத்தின் தனிப்பண்பிற்கேற்ப தம் உடல் உழைப்பை அளித்து எம் சுமையைக் குறைத்த எம் ஊர் வாலிப்பர்கள், பெரியோர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியை நானும் என் சகோதரர்களும் எம் துணைவியரும் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

அன்புள்ள,

அ. அமிர்தலிங்கம்
அ. சொக்கலிங்கம்
அ. வாசுதேவலிங்கம்
அ. திகம்பரலிங்கம்

பண்ணுகம் தெற்கு
சுழிபுரம்.
2-7-75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org